18.02.2025 எ,ம,சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி . (இ.ஏ.எ ண்.7/2022 இன் இ.பி.எண்.9/2019 இன்ஒ.எஸ்.எண். 126 /2012 ) திரு.மகேந்திரன்.

தகதா மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1) பாகம் கேட்டு தாக்கல் செய்த வழக்டிகல் வாதிகள் ½ அங்கு பிரதிவாதிகளுக்கு ½ பங்கு என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைப்படி வடபக்கம் உள்ள பங்கு வாதிகளுக்கும், தென்பக்கம் உள்ள பங்கு பிரதிவாதிகளுக்கும் என இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி நிலை தீர்ப்பாணையில் தரப்பினர்களுக்குள் ஏற்றத்தாழ்வு இருக்கும் பட்சத்தில் சமச்சீர் பாகம் கொடுக்க உத்தரவிடவேண்டுமென்று கூறப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டு தபசில் சொத்தில் 4 வீடுகள் அமைந்துள்ளதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் தபசில் சொத்துக்களை ஏலத்திற்கோ அல்லது பொது ஏலத்திற்கோக அல்லது உபயவாதிகள் யாருடைய அனுபவத்தில் சொத்துக்கள் இருக்கிறதோ அவர் வசம் விட்டுக்கொடுத்து மொத்தம் உள்ள தொகையில் பங்குற்குரிய தொகையை பெற்றுக்கொண்டு பாகம் பிரித்துக்கொள்ளவேண்டியது என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.4 வீட்டில் ஒரு வீட்டை தகதா மனுதார் காளிதாஸ், இன்னொரு வீட்டை தகதா மனுதார் ரெஜினாவும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் வழக்கு சார்பு நீதிமன்றத்தில் முடிவு பெற்றவுடன் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். காளிதாஸ், ரெஜினாவும் வழக்கில் கண்ட பிரதிவாதி வகையறைவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். தகதா மனுதார் கிரையம் பெற்ற சொத்தை அவர்களுக்கு ஒதுக்கிவிட்டு மீதமுள்ள பாதி பங்கை எனக்கு ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் நீதிமன்றம் எந்த பங்கை ஒதுக்கினாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. வழக்கு நிலுவையில் இருந்த போது ஆரம்ப காலகட்டத்தில் பிரதிவாதிகள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

2) அவர்களுடைய வாரீசுகளை இறுதிநிலை தீர்ப்பாணையில் தரப்பினர்களாக சேர்த்து மேல்நடத்தினேன் என்றால் சரிதான். தகதா மனுதார் தகதா மனுவில்கண்ட வீட்டை கிரையம் பெற்று அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தகதா மனுதார் கிரையம் பெற்றதை காட்டக்கூடிய தீர்வை ரசீது ஆவணத்தை மனுவில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையின் படி பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையை நிறைவேற்ற என்னால் தாக்கல் செய்திருக்கும் நிறைவேறுதல் மனு சட்டப்படி செல்லக்கூடியதல்ல

என்றால் சரியல்ல. வழக்குகள் நடந்த விவரம் தகதா மனுதாரருக்கு தெரியாது என்றால் சரியல்ல. தகதா தபசில் சொத்தை கிரையம் பெறும் போது வில்லங்க விவரத்தில் நீதிமன்ற வழக்குவிவரம் தெரியாததால் வில்லங்கச்சான்றை நம்பி தகதா மனுதார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 2021ல் நீதிமன்ற ஊழியர்கள் வந்த பிறகு தான் தகதா மனுதாரர்களுக்கு வழக்கு விவரம் தெரிந்து இந்த தகதா மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தகதா மனுதாரின் தகதா மனு அனுமதிக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.02.2025.